**O.S.42/2014**

Deposition of Witness for PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : Raja | Father/Husband Name | : Palanivel |
| Village | : | Taluk | : அரூர் |
| Caste | : | Calling | : வழக்கறிஞர் |
| Religion | : | Age | : |

**Solemnly affirmed / sworn by Assistant, Dated: 27-09-2019 in accordance with the provisions of act of 1873.**

வாதி தரப்பு 5-ம் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

அ.வ.எண்.1/14 இடை நிலை மனு எண்.2/14 இந்நீதிமன்றத்தால் என்னை நீதிமன்ற ஆணையாராக நியமனம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அந்த வழக்கின் தாவா சொத்தை பார்வையிட்டு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தேன். தற்போது என்னிடம் காட்டபப்படும் நீதிமன்ற ஆணையர் அறிக்கை நான் தாக்கல் செய்தது தான் அது அ.வ.எண்.1/14 ல் தாக்கல் செய்தது. அந்த அறிக்கை வ.சா.ஆ.54 ஆகும். ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது. அப்போது நான் பாவையிடும் போது புத்திரன் என்பவரும் அப்போது முருகன் என்பவர் அந்த சொத்து தன்னுடையது என்றும் எதற்காக அளக்கிறீர்கள் என்று கேட்டார். நான் அதற்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் அளப்பதாகவும் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னேன். அப்போது முருகன் கிராம மக்கள் யாரும் இல்லை. முருகன் ஆட்சேபனை செய்த விவரத்தை நீதிமன்றத்தில் பதிவு செய்யவில்லை.

கு.வி. இல்லை

**O.S.42/2014**

Deposition of Witness for PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : Murali | Father/Husband Name | : Singaravelu |
| Village | : | Taluk | : அரூர் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

**Solemnly affirmed / sworn by Assistant, Dated: 27-09-2019 in accordance with the provisions of act of 1873.**

வாதி தரப்பு 4-ம் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் வேப்பம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வருகிறேன் இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதின் போல் சாட்சி சொல்ல வந்துள்ளேன். 01.9.2019 அன்று மேற்படி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் சேர்ந்தேன். 1.2.2014 அன்று நடந்த சம்பவம் பநற்ற எனக்க தெரியாது. நான் அப்போது அந்த கிராமத்தில் நிர்வாக அலுவலராக இல்லை. அன்றைய தேதியில் கி.நி.அலுவலர் தாவா சொத்து குறித்து சென்றாரா என்று தெரியாது.

கு.வி இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.